பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 03 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான உறவுகள் மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான நான்கு டிஜிட்டல் தளங்களை இன்று தொடங்கிவைத்தார்.

3. மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய ஜனதாதள தலைவர் திரு நிதிஷ்குமார் இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

4. நேபாள நாட்டின் நாடாளுமன்ற தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்றது.

5. **Thionville** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் **Neil Oberleitner** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<<>>>>>>>

இந்தியா - ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான உறவுகள் மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பின்லாந்து அதிபர் **Alexander Stubb**-னுடன் ஆலோசனை மேற்கொண்டபின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இதன்மூலம், உலகளாவிய வளர்ச்சியையும், அமைதியையும், வளத்தையும் நிலைநாட்ட வழிவகை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவ நடவடிக்கை மூலம், எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது என்று இந்தியாவும், பின்லாந்தும் நம்புவதாக பிரதமர் கூறியுள்ளார்.

யுக்ரைன் மற்றும் மேற்காசிய பகுதிகளில் போர் நிறுத்தத்திற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் இரு நாடுகளும் முழு ஆதரவு அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா — பின்லாந்து நாடுகளுக்கு இடையே சுற்றுச்சூழல், ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

அப்போது பேசிய பின்லாந்து அதிபர் திரு **Alexander Stubb,** இந்தியா உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று கூறினார்.

உலகிலேயே மிக விரைவாக வளர்ச்சியடையும் பொருளாதார நாடான இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளது முக்கியமானது என்று அவர் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

உலகளாவிய வளர்ச்சியில் இந்தியா உள்ளிட்ட வளர்ந்துவரும் நாடுகளின் பங்களிப்பு முக்கியமானது என்று பின்லாந்து அதிபர் டாக்டர் அலெக்சாண்டர் **Stubb** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற **Raisina Dialogue** மாநாட்டில் சிறப்புரையாற்றிய அவர், உலக அரசியல் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாக தெரிவித்தார்.

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி **Raisina Dialogue** மாநாட்டை தொடங்கிவைத்தார்.

<<<<<<<<>>>>>>>

உலகின் திறன் மேம்பாட்டு மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய திறன் மேம்பாட்டுத்துறை தொழில் முனைவோர் துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பின்லாந்து அமைச்சர் **Matias Marttinen** -வுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், இருநாடுகளுக்கு இடையே திறன் மேம்பாடு, தொழில் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

பின்லாந்தின் தொழில்நுட்பத் திறனை பயன்படுத்தி இந்திய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து இரு நாடுகளும் திறன் மேம்பாட்டுத் துறையில் முன்னேற முடியும் என்று திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

மேற்காசிய பகுதிகளில் அமைதி திரும்புவதற்கு பேச்சுவார்த்தைகளை தொடங்குமாறு பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரானிடம், பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மேற்காசிய மண்டலத்தில் அமைதி மற்றும் அரசியல் நிலைப்பாட்டை உறுதி செய்வதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இதற்கு இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்றும் தாம் கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான நான்கு டிஜிட்டல் தளங்களை புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

அத்துடன், கணக்கெடுப்புக்கான **Pragati, Vikas** என்ற சின்னங்களையும் அவர் வெளியிட்டார்.

அடுத்த ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான அறிவிப்பை மத்திய அரசு கடந்த ஜூன் **16**-ஆம் தேதி அரசிதழில் வெளியிட்டது.

இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு, டிஜிட்டல் கருவிகளை பயன்படுத்தி நடத்தப்படும் நாட்டின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பாகும்.

முதல் கட்டமாக வீட்டு நிலைமைகள், வீட்டு வசதிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படும்.

இரண்டாவது கட்டத்தில் மக்கள் தொகை சமூக பொருளாதார விவரங்கள் போன்ற தகவல்கள் பெறப்படும்.

<<<<<<<<>>>>>>>

பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதாதள் தலைவருமான திரு நிதிஷ்குமார், மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பிஜேபி தேசிய தலைவர் திரு நிதின் நபின் உள்ளிட்டோருடன் சென்ற அவர், பீகார் சட்டப்பேரவைச் செயலரிடம் வேட்புமனுவை வழங்கினார்.

முன்னதாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பீகார் முதலமைச்சராக பதவி வகிக்க தமக்கு வாய்ப்பு அளித்ததற்கு அம்மாநில மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

பீகாரிலிருந்து பிஜேபி மாநில பொதுச்செயலாளர் திரு **shivesh Kumar**, ஐக்கிய ஜனதாதளத்தின் திரு ராம்நாத் தாகூர், ராஷ்ட்ரிய

லோக் மோர்ச்சாவின் திரு உபேந்திர **Kushwaha** உள்ளிட்டோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

ஐந்து மாநிலங்களவை உறுப்பினர் பதவியிடங்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் நாளை பரிசீலிக்கப்படுகின்றன.

<<<<<<<<>>>>>>>

தமிழகம், தெலங்கானா, மேற்குவங்கம் உட்பட பத்து மாநிலங்களிலிருந்து **37** மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள வரும் **9-**ஆம் தேதி கடைசி நாளாகும்,

போட்டி இருக்கும் பட்சத்தில் வரும் **16-**ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்,

தமிழகத்திலிருந்து ஆறு,

மஹாராஷ்ட்ராவிலிருந்து **7**
மேற்குவங்கம் மற்றும் பீகாரிலிருந்து தலா **5**
ஒடிசாவிலிருந்து **4**

அஸ்ஸாமிலிருந்து 3

சத்திஷ்கர், தெல்ங்கானா, ஹரியானா மாநிலங்களிலிருந்து தலா 2 மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்திலிருந்து ஒரு உறுப்பினரையும் தேர்ந்தெடுப்பதற்காக இந்த தேர்தல் நடைபெறுகிறது.

<<<<<<<<>>>>>>>

நேபாள நாட்டின் நாடாளுமன்ற தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்றது.

காலை 7 மணிமுதல் மாலை ஐந்து மணிவரை வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று தங்களது வாக்குகளை செலுத்தினர்.

இந்நாட்டில் உள்ள 165 நாடாளுமன்ற தொகுதிகளில் 65-க்கும் மேற்பட்ட கட்சிகள் போட்டியிட்டன.

மூவாயிரத்து 17 ஆண் வேட்பாளர்களும், 388 பெண் வேட்பாளர்களும் இந்த தேர்தலில் போட்டியிட்டனர்.

<<<<<<<<>>>>>>>

ஈரான் நாட்டின் தலைவர் அயத்துல்லா அலி கமேனி மறைவுக்கு இந்தியாவின் சார்பில் இன்று முறைப்படி இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி இன்று புதுதில்லியில் உள்ள ஈரான் தூதரகத்தில் உள்ள பதிவேட்டில் இந்திய அரசு சார்பில் இரங்கல் குறிப்பை பதிவு செய்தார்.

<<<<<<<<>>>>>>>

இலங்கை கடல்பகுதியில் ஈரானின் இரண்டாவது போர் கப்பல் வருவதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளதாக இலங்கை அமைச்சர் திரு சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், அந்த போர் கப்பலில் பயணிப்போரின் பாதுகாப்பு குறித்து நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருவதாக தெரிவித்தார்.

முன்னதாக, இந்திய பெருங்கடல் பகுதியில் அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் தாக்குதல் நடத்தியதில் ஈரானின் **IRIS Dena** போர் கப்பல் மூழ்கியுள்ளது.

இதில் பயணித்த **80** பேர் உயிரிழந்தனர்.

<<<<<<<<>>>>>>>

**My Bharat Budget 2026** என்ற போட்டியில் பங்கேற்பதற்கு நாடு முழுவதிலும் உள்ள இளைஞர்களிடமிருந்து **47** ஆயிரத்துக்கும்

மேற்பட்ட கட்டுரைகள் பெறப்பட்டுள்ளதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**2047-**ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், **My Bharat Budget 2026** போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

விளையாட்டு வீரர்களின் நலனுக்காக அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் **Aichi — Nagoya-**வில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கவுள்ள விளையாட்டு வீர்ரகளின் தயார்நிலை தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் **700** விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ள உள்ளதாக அவர் கூறினார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் புதிய சாதனை படைக்க நமது விளையாட்டு வீரர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கப்படும் என்று திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Thionville** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் **Neil Oberleitner** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-4, 6-1** என்ற செட் கணக்கில், இஸ்ரேலின் டேனியல் — அமெரிக்காவின் **Hilderbrand** இணையை வென்றது.

------------

உலகக்கோப்பை டிவென்டி- டிவென்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிராக முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை **5** ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு **55** ரன் எடுத்துள்ளது.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

--------------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **7-5, 6-3** என்ற செட் கணக்கில், சீனாவின் **Ruien Zhang -**ஐ வென்றார்.

-----------------

**Kalaburagi** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் மற்றும் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<<<END>>>>>>>